2014 பிப்ரவரி 3]

திட்டங்களை வழங்கி சாதனை படைத்த முதல்வர் தமிழக முதல்வர் அம்மா அவர்கள். ஆகவே, தமிழக மக்கள் அம்மாவினுடைய செயல்பாட்டைப் பாராட்டுகிறார்கள், வணங்குகிறார்கள். நிச்சயமாக நடக்க இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் நாற்பது தொகுதிகளிலும் வெற்றி பெற்று அம்மா அவர்கள் நல்ல நிலைக்கு வருகின்றபோது ஹெலிகாப்டர் சேவையை மதுரையிலிருந்து தூத்துக்குடிக்கும், மதுரையிலிருந்து தேக்கடிக்கும், மதுரையிலிருந்து கொடைக்கானலுக்கும் மற்றும் மதுரையிலிருந்து இராமேஸ்வரத்திற்கும் நிச்சயமாக அம்மா அவர்கள் அளிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இந்தச் செய்தியைக் கூறி, வணங்கி அமர்கிறேன். வணக்கம்.

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**43—**

**தரம் உயர்த்துதல்**

***4127**—**முனைவர் கோவி. செழியன்:**

*மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவிடைமருதூர் தொகுதி, கூகூர், நல்லாடை அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம், கூகூர் ஊராட்சி, நல்லாடை கிராமத்தில் இயங்கி வருகின்ற அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை அப்பள்ளி இருக்கும் பகுதியில் உள்ள ஆதி திராவிட மக்களின் தேவையை அறிந்து நிதி*

நிலைமையைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, உத்தரவினைப் பெற்று மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசியத் தலைவர் தெய்வத் திருமகன் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நினைவிடம் இருக்கின்ற பசும்பொன்னுக்கு வருகின்ற பிப்ரவரி 9 ஆம் நாள் அன்று தான் சென்று அங்கு இருக்கின்ற விக்ரகத்திற்குத் தங்கக் கவசம் அணிவிக்கவிருப்பதாக அறிவிப்பு செய்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக மனமார்ந்த நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டியில் தாழ்த்தப்பட்ட பள்ளி மாணவர்கள் விடுதியில் தங்கிப் படித்து வருகிறார்கள். அந்த விடுதியின் பெயர் காந்தி ஹாஸ்டல். இந்த விடுதியினைக் கட்டி கிட்டத்தட்ட 50, 60 வருட காலம் ஆகிவிட்டது. மிகவும் பழமையாகவும், சீர்குலைந்தும் இருக்கின்றது. அதற்கு புதுக் கட்டடம் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு நிறைய தாழ்த்தப்பட்ட மாணவர்கள் படித்து வருகிறார்கள். எனவே, அவ்விடத்தில் புதிய கட்டடம் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் அவர்கள் கோருகின்ற, உசிலம்பட்டியில் இயங்குகின்ற அந்த விடுதிக்கு வரும் நிதியாண்டில் புதிய கட்டடம் கட்டுவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு

2014 பிப்ரவரி 3]

எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**44—**

### பேருந்து வசதி

***25025—திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூரிலிருந்து திருவண்ணாமலை, வேலூர் வழியாக திருப்பதிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) துறையூர் மற்றும் திருப்பதி வழித்தடம் தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால், இத்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று, அடுத்து நடக்க இருக்கும் தமிழ்நாடு–ஆந்திரா ஆகிய இரு மாநிலங்களின் ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின்போது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

**திருமதி த. இந்திராகாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணை இமை காப்பதுபோல் கழகத்தையும், ஏழையெளிய மக்களையும் கட்டிக் காத்து இன்றைய தமிழகத்தின்